செய்கிறதா, சர்க்கார் அது சம்பந்தமாக ஏதேனும் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாநில அரசின் சி.ஐ.டி. இலாகா அங்கே அந்த விசாரணையை நடத்தினார்கள். அவர்கள் அது பற்றி ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். இறுதி அறிக்கை வந்தவுடன் அந்த ரிப்போர்ட் மத்திய அரசின் சி.ஐ.டி. டிபார்ட்மெண்ட்டிற்கு அனுப்பப்பட்டு, அவர்களின் கருத்துக்கு விடப்படும்.

(ஆ) பாதுகாப்புத் துறை ஜீப்கள் உறுப்பினர்களுக்கு விற்கப்படுவது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அனதர் பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் டிபன்ஸ் டிபார்ட்மெண்டிலிருந்து அங்கத்தினர்களுக்கு ஜீப் விலைக்குத் தருவதாக அறிக்கை வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்? உறுப்பினர்கள் வேண்டுமானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். நமக்கு வந்த தகவலை உறுப்பினர்களுக்குச் சொல்லியிருக்கிறோமே தவிர, உறுப்பினர்களுக்குத் தேவையானால் ஏலம் கேட்டு எடுத்துக்கொள்ளலாம். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

(4) அரசினர் தனித் தீர்மானம்.

தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைமையிடத்தை சென்னையில் அமைத்திடவும், தோல் ஏற்றுமதி மேம்பாட்டு மன்றம் கூடுதல் பொறுப்பை அனுமதிக்கவும் இந்திய அரசைக் கோருதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. டி. கே. தங்கமணி, உங்கள் திருத்தத்தின்மீது பேசுகிறீர்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசினர் தீர்மானத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விவரம் சம்பந்தமாக அரசு